<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.616/2019</u>

**2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திரு. S. தெய்வீகன், உதவியாளர்**, என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெய்புன்னிசா | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : காதர் பாட்சா | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : முகமது பட்டினம் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 49/2023 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் 3–ம் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வம்சாவழிபட்டியலை தாக்கல் செய்கிறேன். (அது **வாசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தை விளக்குவதற்கான மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்கிறேன். (அது **வாசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 16.05.1966–ம் தேதியிட்ட என் தந்தையான இறந்துபோன 1–ம் வாதிக்கு, எனது தாத்தா எழுதிக்கொடுத்த தாவா சொத்து உட்பட பிற சொத்துக்களுக்கான தான பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) 16.05.1966–ம் தேதியிட்ட எனது பெரியப்பா – முகமது முஸ்தபா என்பவர் எனது தாத்தாவிடம் தானம் பெற்றதற்கான தான பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 13.05.1986–ம் தேதியிட்ட எனது பெரியப்பா – முஸ்தபாவிடமிருந்து அவருக்கு தானம் மூலம் கிடைத்த சொத்துக்களை பிரதிவாதிகள் கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரத்தின் இணையவழி மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தை பொருத்து 1–ம் வாதியான தந்தை மற்றும் பிரதிவாதிகள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா எண் 6658–க்குரிய கணினி மூலம் பெறப்பட்ட கணினி பட்டாவின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(iii) எனது தந்தையான 1–ம் வாதி 09.12.2012–ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 1–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை அவரது மருமகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தை பொருத்து பிரதிவாதிகள் தாக்கல் செய்திருந்த கேவியட் மனுவின் எனது தந்தைக்கு அனுப்பப்பட்ட நீதிமன்ற அறிவிப்பு சார்வு நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 11.04.2016–ம் தேதியிட்ட பிரதிவாதியின் வழக்கறிஞர் 1–ம் வாதிக்கு அனுப்பிய கேவியட் மனுவின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.